
தூய ஆரோக்கிய அன்னை திருவிழா
நவநாள் – 03
செப்டம்பர் 02, 2023
அருள் நிறைந்தவளே!
ஆண்டவரின் தாயே!

# அருள் நிறைந்தவளே ஆண்டவரின் தாயே!

## அன்பில் இணைவோம்

அருட்பணி: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்

Priest: Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக்கள்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்

People: His mercy is everlasting

அருட்பணி: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்.

Priest: Bless the Lord our God
Who sent the Word of life into the World

மக்கள் ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அணைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அணைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக

People: Just is the Lord in all His ways And Holy in all His works
Let every creature praise Him and all living beings bless his name

## அன்னையை புகழ்ந்து பாடுவோம்.

அன்னைக்கு கரம் குவிப்போம்
அவள் அன்பைப் பாடிடுவோம் - 2

கன்னிமையில் இறைவன் உருக்கொடுத்தார்-அந்த
முன்னவனின் அன்னையெனத் திகழ்ந்தாள் -2
மனுக்குலம் வாழ்ந்திட பாதை படைத்தாள் -2
தினம் அவள் புகழினைப் பாடிடுவோம்.

பாவமதால் மனிதன் அருளிழந்தான்
பாசமதால் அன்னை கருணை கொண்டாள் -2
பாரினில் வாடினோர் வாழ்வு கண்டார். –2
பாரினில் அவள் புகழ் பாடிடுவோம்.

## மன்றாடுவோமாக

இறைவா!
மகிமை நிறை கன்னி மரியாவை நினைவு கூறும் நாங்கள்
அவரின் செபங்களின் உதவியால்!
உமது அருளின் நிறைவை நாங்கள் பெற்றுக் கொள்ளச் செய்தருளும்.
என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற உம் திருமகனும்
எங்கள் ஆண்டவருமாகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**முன்மொழி:** **அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

## திருப்பாடலில் செபிப்போம்

**திருப்பாடல் - 132**

1 ஆண்டவரே! தாவீதையும் அவர் பட்ட
இன்னல்கள் அனைத்தையும் நினைவு கூர்ந்தருளும்.
2 அவர் ஆண்டவராகிய உமக்கு ஆணையிட்டுக் கூறியதை,
யாக்கோபின் வல்லவராகிய உமக்குச் செய்த
பொருத்தனையை நினைவுகூர்ந்தருளும்.

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

3 ஆண்டவருக்கு ஓர் இடத்தை, யாக்கோபின் வல்லவருக்கு
ஓர் உறைவிடத்தை நான் அமைக்கும் வரையில்,
4 என் இல்லமாகிய கூடாரத்தினுள் செல்லமாட்டேன்:
படுப்பதற்காக என் மஞ்சத்தில் ஏறமாட்டேன்:

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

5 என் கண்களைத் தூங்க விடமாட்டேன்:
என் இமைகளை மூடவிடமாட்டேன் என்று அவர் சொன்னாரே.
6 திருப்பேழை எப்ராத்தாவில் இருப்பதாய்க் கேள்விப்பட்டோம்:
வனவெளியில் அதைக் கண்டுபிடித்தோம்.
7 அவரது உறைவிடத்திற்குச் செல்வோம்! வாருங்கள்:
அவரது திருவடிதாங்கி முன் வீழ்ந்து பணிவோம் என்றோம்.

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

8 ஆண்டவரே! நீர் உமது வல்லமை விளங்கும் பேழையுடன்
உமது உறைவிடத்திற்கு எழுந்தருள்வீராக!
9 உம் குருக்கள் நீதியை ஆடையென அணிவார்களாக!
உம் அன்பர்கள் அக்களிப்பார்களாக!
10 நீர் திருப்பொழிவு செய்த அரசரை,
உம் ஊழியராகிய தாவீதின் பொருட்டுப் புறக்கணியாதேயும்.

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

11 ஆண்டவர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டுக் கூறினார்:
அவர்தம் வாக்குறுதியினின்று பின்வாங்கமாட்டார்:
உனக்குப் பிறந்த ஒருவனை அரசனாக ஏற்படுத்தி
உன் அரியணையில் வீற்றிருக்கச் செய்வேன்.

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

12உன் மைந்தர் என் உடன்படிக்கையையும்,
நான் அவர்களுக்குக் கற்பிக்கும்
என் நியமங்களையும் கடைப்பிடித்தால்
அவர்களுடைய மைந்தரும் என்றென்றும்
உன் அரியணையில் வீற்றிருப்பர்.
**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

13ஆண்டவர் சீயோனைத் தேர்ந்தெடுத்தார்:
அதையே தம் உறைவிடமாக்க விரும்பினார்.
14இது என்றென்றும் நான் இளைப்பாறும் இடம்:
இதை நான் விரும்பினதால் இதையே என் உறைவிடமாக்குவேன்.
**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

15இங்கே என் ஆசியால் உணவுப் பொருள்
தாராளமாகக் கிடைக்கச் செய்வேன்:
அதனை ஏழைகள் உண்டு நிறைவு பெறுமாறு செய்வேன்.
16இங்குள்ள குருக்களுக்கு மீட்பெனும் உடையை உடுத்துவேன்:
இங்குள்ள என் அன்பர்கள் மகிழ்ந்து ஆரவாரிப்பார்கள்.
**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

17இங்கே தாவீதின் மரபிலிருந்து
ஒரு வல்லவனை எழச் செய்வேன்:
நான் திருப்பொழிவு செய்தவனுக்காக
ஒரு ஒளிவிளக்கை ஏற்பாடு செய்துள்ளேன்.
**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

18அவனுடைய எதிரிகளுக்கு இகழ்ச்சியெனும்
உடையை உடுத்துவேன்:
அவன்மீதோ அவனது மணிமுடி ஒளிவீசும்.
**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

பிதாவுக்கும் சுதனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாகுக
ஆதியிலிருந்தது போல இப்பொழுதும் என்றென்றும் மகிமை உண்டாகுக

**முன்மொழி:** **அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் அன்னையே!**
**அகிலம் வாழ அனுதினம் மன்றாடுபவளே! அன்னையே வாழ்க!**

## இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்

### புனித லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: லூக். 1:38—43

39அதன்பின் மரியா புறப்பட்டு யூதேய மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விை-
ரந்து சென்றார். 40அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை
வாழ்த்தினார். 41மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர்
வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய
ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். 42அப்போது அவர் உரத்த
குரலில், ‘பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்: உம் வயிற்றில் வளரும்
குழந்தையும் ஆசி பெற்றதே! 43ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?
44உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை
பேருவகையால் துள்ளிற்று. 45ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும்
என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்’ என்றார். 46அதைக் கேட்ட மரியா
பின்வருமாறு கூறினார்: 47ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்
படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை
கொள்கின்றது.

**இது கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி**
**கிறிஸ்துவே உமக்குப் புகழ்..**

### Gospel Reading Lk:1:39-45

39 In those days Mary set out and went with haste to a Judean
town in the hill country, 40 where she entered the house of Zech-
ariah and greeted Elizabeth. 41 When Elizabeth heard Mary’s
greeting, the child leaped in her womb. And Elizabeth was filled
with the Holy Spirit 42 and exclaimed with a loud cry, “Blessed
are you among women, and blessed is the fruit of your
womb. 43 And why has this happened to me, that the mother of
my Lord comes to me? 44 For as soon as I heard the sound of
your greeting, the child in my womb leaped for joy. 45 And
blessed is she who believed that there would be[e] a fulfillment
of what was spoken to her by the Lord.”

**இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்...** (Reflection)



## இறைமக்களின் மன்றாட்டு

**அருட்பணி: ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பியதால் பேறுபெற்ற தாயே! எங்கள் ஆரோக்கிய அன்னையே! உம்மைப்போல இறைதிட்டத்துக்கு நாங்களும் ஒத்துழைக்க உம்மிடம் எங்கள் வேண்டுதல்களை சமர்ப்பிக்கின்றோம்.**

1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம்: தாய் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் குருக்கள் மற்றும் இறைமக்கள் நமது அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பட்டு எல்லோரையும் மகிழ்விக்கும் நற்செய்தியின் கருவிகளாகத் திகழ்ந்திட ...

**ஆண்டவரின் தாயே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம். நமது தலைமை ஆயர் மற்றும் இனையாயர்கள் நமது உயர் மறைமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளி மகிழ்சியிலும் மனநிறைவிலும் நாளுக்கு நாள் வாழ்ந்திட வளர்ந்திட...

**ஆண்டவரின் தாயே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காக மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்து உலகிற்கு ஒளியாய்த் திகழ்ந்திட...

**ஆண்டவரின் தாயே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

4. புனித ஆரோக்கிய அன்னையின் பத்தர்களுக்காக மன்றாடுவோம்: அன்னையைப் போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து வளர்ந்திடவும் நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திடவும் அருள்வேண்டி..

**ஆண்டவரின் தாயே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

5. உலக அமைதிக்காகவும், குறிப்பாக இந்தியாவில் குறிப்பாக மனிப்பூரில் அமைதி திரும்பவும், இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் மறுவாழ்வு பெறவும்...

**ஆண்டவரின் தாயே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

6. நமது குடும்பங்களை அன்னையிடம் ஒப்படைப்போம். ஒவ்வொரு குடும்பங்களின் தேவைகள். அன்பு, அமைதி, குடும்ப ஒற்றுமை, இன்னும் பல்வேறு தேவைகளையும் குறிப்பாக விசா தேவைகள் அனைத்தையும் அன்னையிடம் ஒப்படைப்போம், இவற்றிலிருந்து மீண்டுடெழுந்து நாங்கள் அன்றாட ஆன்மீக வாழ்வில் வளரவும், எங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வில் நம்பிக்கை ஒளியில் வெற்றிநடைபோடவும்...

**ஆண்டவரின் தாயே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

6. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக ....

**ஆண்டவரின் தாயே! அருள் நிறைந்த மரியே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

# புனித ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தாயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னி மரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்
நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றிகூருகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும்
நீர் அடைந்த பேரின்பத்தை நாங்களும் அடைய
எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே இரக்கமிக்க அன்னையே!
நீர் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுகின்றவர்களுக்கு
நீர் வாக்களித்துள்ள விசேச உதவியையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம் திருமகன் இயேசுகிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றை பெற்றுத்தந்தருளும்.

**(இங்கு மன்றாட்டுக்களை நினைவிற்கொள்ளவும்)**

இறைவனின் தாயே! இப்பொழுது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கிறோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!

**(௯ முறை அருள் நிறைந்த செபம்)**

நீர் அணிந்திருக்கும் மணிமுடியில்
எம் செபங்கள் அத்தனையும் விண்மீண்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கின்றென்.
வருந்துவோருக்கு ஆறுதலே!
எம் வேளைநகர் ஆரோக்கியத் தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட
எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான
இயேசு கிறிஸ்துவின் திருஇருதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியோர்களாகிய எங்களது செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

# அருள் நிறைந்த நம் ஆரோக்கிய அன்னைக்கு அஞ்சலி

ஆரோக்கிய மாதாவே-உமது
புகழ்பாடித் துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்.

அலைகள் மோதிடும் கடற்கரை தன்னில்
வசித்திட ஆசை வைத்தாயே
பலவகை கலைகளும் பாரினில் துலங்கிட
அணைவர்க்கும் துணை புரிந்தாயே-2

தேன்கமழும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே-2

## மன்றாடுவோமாக

ஆண்டவரே! தூயவரான தந்தையே!
உம் திருமகனின் தாய் மரியாவால்
உமது வல்லமையை காண்பித்து அவர் வழியாக
இன்றும் நாங்கள் எங்கள் மீட்பின்
நிறைவைக் கண்டடையச் செய்கின்றீர்.
உமது அளவற்ற ஞானத்தாலும் அன்பாலும்
திருச்சபை என்றும் உமது இல்லத்தில்
தாய்மைக்குரிய பன்பை நிறைவடையச் செய்து
உமது அருளின் பகிர்வினை எங்களுக்கு அளிக்கின்றார்.
அவரின் வார்த்தையால் எங்களுக்கு கற்பிக்கின்றீர்
அவரின் முன்மாதிரிகையால் உம் திருமகனை
பின்பற்ற செய்கின்றீர் அவரின் செபத்தால்
எங்களை மன்னிக்கின்றீர்.
நாங்களும் அன்னையைப்போல அருள்வாழ்வில் நிலைத்துநிற்க அருள்தாரும்.
எங்கள் ஆண்டவராகிய ...

## இறையாசீர்

**அருள் நிறைந்த மரியே! ஆண்டவரின் தாயே!**
**அனைத்துலகின் அரசியே! தூய மரியே வாழ்க**



**Velankanni Community of Southern California**
**Divine Saviour Catholic Church**
**610 Cypress Ave, Los Angeles CA 90065**